Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:–49/2023 Date:– 18.03.2026

Deposition of witness for prosecution :– PW :–1

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் தற்போது வடக்குப்பேட்டை அண்ணா நகரில் வசித்துக்கொண்டு மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் எனது கணவர் ஆவார்.

2. 3 ஆண்டுகளுக்கு முன் என் கணவர் புளியம்பட்டிக்கு அருகில் உள்ள மில் அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிர்புறமாக வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு அவரை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது ஆம்புலன்ஸ் டிரைவர் மேற்படி விபத்து குறித்து எனக்கு போன் மூலமாகத் தெரிவித்தார். என் கணவரை சத்தியமங்கலத்திலிருந்து பெருந்துறை அரசு மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள்.

3. அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள ரேகை என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது கணவர் 10 நாட்களுக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பி

வைத்துவிட்டார்கள். வீட்டிற்கு வந்து 3 நாள் கழித்து மீண்டும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு 8 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

1. இவ்வழக்கு விபத்து குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என்னுடைய கணவருக்கு மனநிலை சரியில்லை என்றும், அவர் வீட்டிற்கு வரமாட்டார் என்று புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது புகார் வாக்குமூலத்தில் எனது கணவருக்கு வாத நோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்று சரியாக நடக்க முடியாத நிலையில் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் மனநிலை சரியில்லாத காரணத்தினால் அவராக திடீரென ரோட்டைக் கடந்து சென்றதால்தான் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –**</u> இல்லை.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:–49/2023 Date:– 18.03.2026

Deposition of witness for prosecution :– PW :–2

| Name | சகுந்தலா | Age | |
|---|---|---|---|
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் தற்போது கோபியில் வசித்துக்கொண்டு பூக்கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் எனது அண்ணன் ஆவார்.அ.சா.1 எனது அண்ணி ஆவார். 15ம் தேதி 2023ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை. என் அண்ணன் வேலனுக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

2. அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது அண்ணனை 10 நாட்களுக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். வீட்டிற்கு வந்து 3 நாள் கழித்து மீண்டும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கு 8 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. இவ்வழக்கு விபத்து குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன நபர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.